3. கவன ஈர்ப்பு

(அ) திருச்சி, உய்யக்கொண்டான் வாய்க்கால் பாசனப் பகுதிக்குத் தண்ணீர் விடுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு திரு. பரணிகுமார், திரு. கே.என். சேகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பா. பரணிகுமார்.

திரு. பா. பரணிகுமார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. கே. என். சேகரன் அவர்களை பேச அனுமதிக்க கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.என். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி, உய்யக்கொண்டான் வாய்க்காலில் பாசனத்திற்கு திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதால் பயிர்களைக் காப்பாற்றுவதற்கு உடனடியாகத் தண்ணீரைத் திறந்துவிட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்த விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

காவேரி ஆற்றின் வலது கரையில் கட்டளை படுக்கை அணையிலிருந்து பிரியும் தென்கரை கால்வாயின் கடைமடையில் (Tail drop) இருந்து உய்யக்கொண்டான் கால்வாய் ஆரம்பமாகிறது. இதன் பாசனப்பகுதி பெட்டவாய்த்தலை எல்லையில் இருந்து 43/0 மைலில் உள்ள வாழவந்தான்கோட்டை கிராமம் எல்லை வரை கால்வாயின் இடது பக்கம் அமைந்துள்ளது. கால்வாயின் மொத்த பாசனப் பரப்பு 32,742 ஏக்கர் மற்றும் இக்கால்வாயில் ஜூன் 1 முதல் 30 வரை, 30 நாட்கள் போக வருடத்தில் மிகுதியான நாட்களில் தண்ணீர் வழங்கப்பட்டு

வருகிறது. காவேரி டெல்டா பகுதிகளுக்கு நீர் வழங்கிய நாட்கள் போக இந்தக் கால்வாயில் மைல் 27/4-ல் அமைந்துள்ள கல்கண்டார்கோட்டை கிராம எல்லை வரை உள்ள 20556 ஏக்கர் பாசனப் பரப்புக்கு நீர் வழங்கப்படுகிறது. தற்சமயம் மேட்டூர் அணையின் கொள்ளளவு குறைவாக உள்ளதாலும், அணைக்கு வரும் உள்வரத்து நீரும் குறைவாக இருப்பதாலும், காவேரியின் வலது கரை மற்றும் இடது கரை வாய்க்கால்களுக்கு ஒவ்வொரு 5 நாட்களுக்கு ஒருமுறை என்று முறை வைத்து 25-3-2002 முதல் பாசனத்திற்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. தென்கரை வாய்க்கால் பகுதிக்கு 30-3-2002 முதல் பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. உய்யக்கொண்டான் வாய்க்காலுக்கு தலைப்புப் பகுதியில் இருந்து 16-வது மைல் வரை நீர் வழங்கப்பட்டு விட்டது. மீதம் உள்ள பகுதிக்கு ஏப்ரல் திங்கள் 9,10,11 ஆகிய மூன்று தினங்களுக்கு நீர் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.என். சேகரன்.

திரு. கே.என். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்தேன். அதிலே ஏப்ரல் 9,10,11 மூன்று தினங்கள் தண்ணீர் திறந்துவிடப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஜூன் மாதம் 1ஆம் தேதி வரை அந்தக் கால்வாயில் வாழைப் பயிர்களுக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும். கடந்த சம்பா பயிர் அறுவடை நடைபெற்றதற்குப் பிறகு நீண்ட நாட்களாக உய்யக்கொண்டான் கால்வாயில் தண்ணீர் விடாத காரணத்தால், அதிலே பயிரிடப்பட்டு இருக்கிற வாழைப் பயிர்கள் எல்லாம் கருகி, காய்ந்து விவசாயிகளுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. கடந்த சம்பா அறுவடையின்போது பருவம் தவறி பெய்த பெரு மழையினாலும், பூச்சி நோயினாலும், நெற்பயிர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டு, விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. இந்தத் தண்ணீர் திறந்துவிடாத காரணத்தால் இப்போது விவசாயிகளுக்கு, மிகப் பெரிய இழப்பு ஏற்படயிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கிட்டத்தட்ட 20 நாட்களுக்கு முன்பாகவே கொடுத்து இருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அதெல்லாம் தனியாக வந்து பேசுங்கள். இப்போது அமைச்சர் கவனத்திற்கு என்ன கேள்வி கேட்க வேண்டுமோ அதைக் கேளுங்கள்.

2002 மே 6]

முற்பகல் 10-05

திரு. கே. என். சேகரன்: *அந்தக் கால்வாயில் அதிக அளவில் நீர் திறந்துவிட்டு, வாழைப் பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிகளிலே இப்போது திருவிழாக் காலங்களாக இருப்பதாலும், அதேபோன்று நிலத்தடி நீரும் குறைந்திருக்கின்ற காரணத்தாலும், அதிக அளவிலே நீர் திறந்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்தக் கால்வாயில் நீர்த் தாவரங்களான நெய்வேலி காட்டாமணக்கு, ஆகாயத் தாமரை போன்ற செடிகள் எல்லாம் நிறைய ஆக்கிரமித்திருக்கின்றன. ஆகவே, அவற்றை எல்லாம் அப்புறப்படுத்தி, அந்தக் கால்வாய்க்குரிய கொள்ளளவு நீரைத் திறந்துவிட்டு, வாழைப் பயிர்களைக் காப்பாற்றுவதற்கு மேலும் அதிக அளவிலே நீரைத் திறந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி உய்யக்கொண்டான் வாய்க்காலில் ஏற்கெனவே 5-4-2002 முதல் 11-4-2002 வரையிலும், 19-4-2002-லிருந்து 24-4-2002 வரையிலும், தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. மறுபடியும் 3-5-2002-லிருந்து 300 கன அடி தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. நேற்றைய நிலவரப்படி 154 கன அடி தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது.*

நாளை மறுநாள் 8-5-2002-லிருந்து 300 கன அடி நீர் விடுவதற்கு அங்கே ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறது. மற்றபடி, கடைமடையாக இருக்கின்ற கல்கண்டார்கோட்டை வரைக்கும் கிட்டத்தட்ட 27 மைல் நீளத்திற்கு இருக்கின்ற கடைமடை வரைக்கும் விவசாயம் பாதிக்காத வகையில் ஜூன் 1 ஆம் தேதி வரைக்கும் தொடர்ந்து நீர் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பா. பரணிகுமார்.*

***திரு. பா. பரணிகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் ஏப்ரல் திங்கள் 9,10,11 ஆகிய மூன்று தினங்களுக்குத்தான் நீர் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால், இங்கே அமைச்சர் அவர்கள் ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி வரைக்கும் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார். உண்மையிலேயே அங்கே 20 நாட்களுக்குத் தண்ணீர் வரவில்லை. ஏப்ரல் மாதம் முழுவதும் வரவில்லை. ஒன்றிரண்டு நாட்கள்தான் வந்தது. மேட்டூர் அணையில் 25 அடி இருந்த காலத்திலே நிறைய தண்ணீர், அதாவது 8 ஆயிரம், 10*

ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது 45 அடிக்கு மேல் தண்ணீர் இருக்கக்கூடிய நிலையில்கூட, தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. அதனால் விவசாயம் மிகவும் பாதிக்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் இனிமேலாவது இந்த மாதிரி இல்லாமல், அதிகத் தண்ணீரை இப்போதாவது விட்டு, விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 தினங்களுக்கு ஒருமுறை அங்கே முறை வைத்து தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. முன்பு 5 தினங்களுக்கு ஒருமுறை என்று வைத்து தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது மேட்டூரில் நீர்மட்டம் குறைவாக இருப்பதால், 10 நாட்களுக்கு ஒருமுறை நீர் கொடுக்கப்பட்டு வருகிறது. 11-4-2002 வரை கொடுத்திருந்தோம். மீண்டும் 19-4-2002-லிருந்து 24-4-2002 வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. 3-5-2002-லிருந்து தண்ணீர் அந்த வாய்க்காலுக்குச் சென்று கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப்படாத வகையில் தொடர்ந்து நீர் தரப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே வாய்க்காலில் இருக்கின்ற மாசுகளை, அதாவது காட்டாமணக்குச் செடிகளை அகற்ற வேண்டுமென்று சொன்னார்கள். சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டு, அந்தக் குறைகள் நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(ஆ) கோவை, சிறுவாணி மற்றும் வேலூர் ஜவ்வாது மலைப் பகுதிகளில் காட்டு யானைகளால் பயிர்கள் நாசம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், சிறுவாணி மலைப் பகுதி கிராமங்களிலும், வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதி, மந்தாரக்குட்டை, ரெட்டியூர், படக்குப்பம், பெண்ணாகரம், தளி ஆகிய கிராமங்களிலும் காட்டு யானைகள் வயலுக்குள் வந்து பயிர்களை, மரங்களை நாசம் செய்து,